02.03.2026

I.D.O.P. No. 25/2017

**எ.சா.1 – ஆண்ட்ரூஸ் பிரான்சிஸ் சேவியர்**

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

நான் வீடு கட்டுவதற்கு திருமணத்திற்கு முன்பே கடன் வாங்கினேன். அந்த வீடு என் பெயரில் இல்லை. அது எனது பெற்றோர் பெயரில் அவர்களுக்காக கட்டிக் கொடுத்தேன் என்றால் சரிதான். வீட்டு கட்ட வாங்கிய கடன் தொகைக்கு மாத தவணை செலுத்தியதுபோக மீதி உள்ள ரூ.20,000/– வைத்துக் கொண்டு, மனுதாரரை சென்னையில் குடும்பம் நடத்த அழைத்தேன் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பே மனுதாரரின் வீடு மற்றும் அதில் 2 பேர் வசிக்க கூடிய அளவிற்கு வசதியுள்ளது என்பது எனக்கு தெரியும். என்னுடைய வீட்டில் ஒரு அறையை எனது தகப்பனாருக்கு கொடுத்துவிட்டதால் நாங்கள் இருவரும் ஹாலில்தான் தங்க வேண்டி இருந்தது என்றால் சரியல்ல. என் தகப்பனார் ஓய்வு பெற்ற ஆசிரியர். என் அப்பாவுக்கு வங்கி கணக்கு உள்ளது, அம்மாவுக்கு வங்கி கணக்கு இல்லை. என் அப்பாவுக்கு மாதாமாதம் பணம் அனுப்புவேன் என்றால் நான் என் அப்பாவிற்கு அண்ணன் மூலமாக அனுப்புவேன், ஏனென்றால் அவரால் வங்கிக்கு செல்ல இயலாது. என் மனைவி மூலமாக என் தகப்பானருக்கு பணம் அனுப்பினேனா என்றால் அதற்கு தேவை ஏற்படவில்லை. நான் வாடகை வீட்டில் சென்னையில் தங்கிக் கொண்டு ரூ.20,000/–ஐ என் மனைவிக்கு வாராவாரம் ரூ.3000/– அனுப்பினேன் என்பது நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

திருமணத்திற்கு பிறகு என் மனைவி மேலும் படித்து ஒரு நல்ல நிலைக்கு வந்துள்ளார் என்றால் சரிதான். என் மனைவியின் விருப்பப்படிதான் நாங்கள் சென்னைக்கு சென்றோம் என்றால் சரிதான். சென்னைக்கு வந்த மனுதாரரை எனக்கு அவர் அங்கு இருப்பது பிடிக்கவில்லை என்றும், என்னுடைய தன்னிச்சையான வாழ்க்கைக்கு இடையூறாக இருப்பதாக கருதி, அவரை அங்கிருந்து அனுப்பிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. அதன்பிறகு என் மனைவி B.Ed. படித்து தேர்ச்சியானார் என்றால் சரிதான். அவர் வைத்திருந்த இருசக்கர வாகனம் அவர் பெயரில்தான் இருந்தது. எனக்கு பண கஷ்டம் இருந்ததால் என்னால் அடிக்கடி சென்னைக்கும், திருச்சிக்கும் வந்து செல்ல முடியவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதன் பிறகு என் மனைவி TET Exam எழுதினார் என்றால் சரிதான். அதன்பிறகு அவர் M.Phil. படிக்கும்போது கர்ப்பமுற்றியிருந்தார் என்றால் சரிதான். அந்த சமயத்தில் அவர், அவருடைய தாயார் வீட்டில்தான் இருந்தார். மனுதாரரின் சகோதர, சகோதரிகளுடைய குடும்ப சூழ்நிலை அனைத்தும் எனக்கு திருமணத்திற்கு முன்பே தெரியும் என்றால் சரிதான். நான் வெளிநாட்டில் வேலை செய்யும்போது என்னுடைய சம்பளம் மூன்று மடங்கு அதிகம் என்று சொன்னால் சரியல்ல, இரண்டு மடங்கு அதிகம். வெளிநாட்டிலிருந்து என் மனைவிக்கு செலவுக்கு பணம் அனுப்பினேனா என்றால் அனுப்பினேன், அதற்கான ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்யும்போது அதில் என் மனைவிக்கு எவ்வளவு தொகை அனுப்பினேன் என்பது தெரிய வரும் என்றால் சரிதான். நான் மெக்சிகோவில் வேலை செய்யும்போது மாதம் ரூ.1,00,000/–

சம்பாதித்தேன் என்று சொல்லியிருப்பது சரிதான். திடீரென எனக்கு அதிகமான சம்பளம் வெளிநாட்டில் கிடைத்ததால் பல பெண்களுடன் தொடர்பு வைத்துக் கொண்டு, ஆடம்பரமாக செலவு செய்தேன் என்று சொன்னால் சரியல்ல. அதனால் என் மனைவியும், மகனையும் புறக்கணித்துவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. என் மனைவியின் வளைகாப்பு, என் மகனின் மொட்டை அடிக்கும் நிகழ்வு ஆகியவற்றிற்கு என் மனைவியின் சேமிப்பிலிருந்தும், அவர் பெற்றோர் செலவு செய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும், என் மாமனாருக்கும் உறவுமுறை சுமூகமாக இல்லை என்று சொன்னால் சரியல்ல, சுமூகமாகதான் இருந்தது. என் மாமனாரும் அவரால் முடிந்த அளவிற்கு என்னையும், என் குடும்பத்தாரையும் ஆதரித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. என் மனைவி கர்ப்ப முற்றியதிலிருந்து குழந்தை பிறக்கும் வரை நான் எத்தனை முறை சென்று பார்த்தேன் என்றால் நான்தான் அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். என் மனைவி கர்ப்பமாக இருந்த காலத்தில் நான் மெக்சிகோவில் வேலையில் இருந்தேன் என்றால் சரிதான். என் மனைவிக்கு குழந்தை பிறக்க போகும் தேதியை தெரிந்து கொண்டு அப்போதுதான் இந்தியாவிற்கு வந்தேன் என்றால் சரிதான். நான் இந்தியாவிற்கு வருவதற்கு முன்பாகவே என் மனைவியை மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சைக்காக கட்டணங்களை செலுத்தி விட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல, நான் வந்தபிறகுதான் என் மனைவியை மருத்துவமனையில் சேர்த்தேன். திருச்சி, அமெரிக்கன் மருத்துவ மனையில் என் மனைவியை காண்பித்து வந்தேன். குழந்தை பிறந்த பிறகு மருத்துவமனையிலிருந்து என் மனைவி அவர் பெற்றோர்

வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றால் சரிதான். நான் சென்னைக்கு சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. மெக்சிகோவிலிருந்து வந்த பிறகு 6 வாரங்கள் இங்கு தங்கியிருந்தேன். அப்போது நான் பணம் கொண்டு வந்திருந்தேன், அதற்கு ஆதாரம் உள்ளது. நான் அந்த 6 வார காலம் என் பெற்றோர் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான், என் மனைவியை சென்று பார்த்து வருவேன். நான் மெக்சிகோவிலிருந்து இந்தியாவிற்கு வேலைக்கு வரும்வரை என் மனைவி வேலையில்லாமல் இருந்தார் என்றால் சரிதான். மொட்டை அடிக்கும் செலவிற்காக நான் ரூ.1,50,000/- கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் எந்த தேதியில் கொடுத்தேன் என்பதும், எந்த தேதியில் மொட்டை அடித்தார்கள் என்பதும் எனக்கு தெரியாது.

**(மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2026.03.02 17:56:34 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.